No. of Printed Pages : **4**

**7691**

பதிவு எண் | | | | | | | |

# Part III — Vocational Subjects

# வேளாண் அறிவியல்

# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ]　　　　[ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** வேளாண் தட்பவெப்ப மண்டலங்களில் மிகப்பெரியது __________.

(அ) காவிரி டெல்டா மண்டலம்　　(ஆ) மேற்கு மண்டலம்

(இ) வடகிழக்கு மண்டலம்　　(ஈ) தெற்கு மண்டலம்

**2.** கொடுக்கப்பட்டுள்ள பயிர்களில் எது பயறுவகைப் பயிர் ?

(அ) சோளம்　　(ஆ) உளுந்து　　(இ) கோதுமை　　(ஈ) கம்பு

**3.** அறுவடை செய்யப்பட்ட பயிர்களின் அடிக்கட்டைகளை மீண்டும் பயிர் சாகுபடிக்கு அனுமதித்தல் __________ எனப்படும்.

(அ) மறுதாம்பு சாகுபடி　　(ஆ) தொடர்ச்சியான சாகுபடி

(இ) ஊடுபயிர் சாகுபடி　　(ஈ) தொடர் சாகுபடி

[ திருப்புக

4. ‘C’ வடிவில் வளைக்கப்பட்ட அடிமண் உழவுக் கலப்பை __________.
(அ) உளிக் கலப்பை (ஆ) சட்டிக் கலப்பை
(இ) இரும்புக் கலப்பை (ஈ) திருப்புக் கலப்பை

5. பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர் __________.
(அ) டாக்டர் மா.சு. சுவாமிநாதன் & சி. சுப்ரமணியம்
(ஆ) நார்மன் எ. போர்லாக்
(இ) அர்னான் & ஸ்டௌவ்
(ஈ) டாக்டர் வர்கீஸ் குரியன்

6. தாவரங்களால் பயன்படுத்தப்படும் நிலநீர் வகை :
(அ) உறிஞ்சு நீர் (ஆ) புவியீர்ப்பு நீர்
(இ) நுண்புழை நீர் (ஈ) மேற்கண்ட அனைத்தும்

7. பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைகளை இடுதல் __________ எனப்படும்.
(அ) அறுவடை (ஆ) நடவு
(இ) விதைப்பு (ஈ) மேற்கண்ட அனைத்தும்

8. சொட்டுநீரின் வழியாக ஊட்டச்சத்துகளைக் கொடுக்கும் முறைக்கு __________ என்று பெயர்.
(அ) உரப்பாசனம் (ஆ) குறிப்பிட்ட இடத்தில் இடுதல்
(இ) வான்வழித் தெளிப்பு (ஈ) பரந்து தூவுதல்

9. தேர்திறனற்ற களைக்கொல்லி __________.
(அ) பாரகுவாட் டைக்ளோரைடு (ஆ) அட்ரசின்
(இ) பென்டிமெத்தலின் (ஈ) 2, 4 - D

10. அகழி பாசன முறையில் __________ மீ இடைவெளியில் அகழிகள் வெட்டப்படுகின்றன.
(அ) 7 (ஆ) 5 (இ) 3 (ஈ) 4

11. பூச்சிகளைப் பற்றி படிக்கும் அறிவியலுக்கு __________ என்று பெயர்.
(அ) எண்டமாலஜி (ஆ) பயாலஜி
(இ) ஃபிசியாலஜி (ஈ) பேதாலஜி

12. பாலைத் தயிராக்க உதவும் நுண்ணுயிரி __________.
(அ) சக்கரோமைசிஸ் (ஆ) ஈஸ்ட்
(இ) அஸ்பர்ஜில்லஸ் (ஈ) லேக்டோபேசில்லஸ்

**13.** __________ எக்டர் நிலம் வைத்திருந்தால் அவர் சிறு விவசாயி என்று கருதப்படுகிறார்.
(அ) 10.0 (ஆ) 1.5 (இ) 5.0 (ஈ) 3.0

**14.** முறையற்ற பாணியில் அமைந்துள்ள தோட்டம் __________.
(அ) இத்தாலிய தோட்டம் (ஆ) முகலாய தோட்டம்
(இ) ஜப்பானிய தோட்டம் (ஈ) பாரசீக தோட்டம்

**15.** வண்ண மீன் வளர்ப்பில் வளர்க்கப்படும் முட்டையிடும் மீன் __________.
(அ) கத்தி வால் (ஆ) தங்க மீன்
(இ) பிளாட்டி (ஈ) மத்தி மீன்

## பகுதி - II

குறிப்பு : **ஏதேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

**16.** இந்தியாவில் பின்பற்றப்படும் பருவகால வகைப்பாட்டினைப் பயிர்களுடன் எழுதுக.

**17.** வெண்மைப் புரட்சி என்றால் என்ன ?

**18.** தீவனப் பயிர்களின் நான்கு வகைகள் யாவை ?

**19.** நாற்றாங்காலின் வகைகள் யாவை ?

**20.** மண் அரிமானம் – குறிப்பு வரைக.

**21.** இரண்டாம் நிலை உழவுக் கருவிகள் – குறிப்பு வரைக.

**22.** உரங்களை ஊட்டச்சத்துகளின் எண்ணிக்கையைப் பொருத்து எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

**23.** விதை நேர்த்தி என்றால் என்ன ?

**24.** நன்னீர் மீன் வளர்ப்பு என்றால் என்ன ?

**25.** ஒட்டுண்ணித் தன்மையை அடிப்படையாகக் கொண்டு களைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

**26.** பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்டறிய பயன்படுத்தப்படும் கண்காணிப்புப் பொறிகள் யாவை ?

**27.** வேளாண் விரிவாக்கம் என்றால் என்ன ?

**28.** நில எழிலூடுதலுக்கு ஏற்ற பூ மரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

[ திருப்புக

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும் 5** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

29. சொட்டு நீர் பாசனத்தின் நிறைகளை எழுதுக.

30. ஒருங்கிணைந்த களை மேலாண்மையின் நோக்கம் பற்றி எழுதுக.

31. விதை, தானியம் – வேறுபடுத்துக.

32. பூந்தொட்டிகளை எவ்வாறு பராமரிப்பது ?

33. உரப் பயிர்களைப் பற்றி விவரிக்கவும்.

34. பூச்சிகள் அதிக அளவில் தோன்றக் காரணங்கள் யாவை ?

35. உன்னுடைய பகுதியில் பின்பற்றப்படும் பயிர் சுழற்சி என்ன ? அதன் பயன்களைப் பற்றிக் குறிப்பிடுக.

## பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **இரண்டு** பக்க அளவில் விடையளிக்கவும். **2x10=20**

36. (அ) பயிர் நோய்களின் பொதுவான அறிகுறிகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) பயிரிடப்படும் பயிர்களில் பின்பற்றப்படும் பல்வேறு உரமிடும் முறைகளை விவரிக்கவும்.

37. (அ) நீர்ப்பாசன முறைகள் என்றால் என்ன ? உன்னுடைய பகுதியில் செய்யும் ஏதேனும் இரண்டு பாசன முறைகளையும், அதன் நிறை குறைகளையும் எழுதுக.

**அல்லது**

(ஆ) மீன்களைத் தாக்கும் நோய்களைப் பற்றி எழுதி அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் விவரிக்கவும்.

- o O o -